NSW கல்வித் திணைக்களம்

COVID-19 requirements
for visitors, contractors and service providers

# COVID-19 தேவைப்பாடுகள்

## வருகையாளர்கள், ஒப்பந்ததாரர்கள் மற்றும் சேவை வழங்குநர்களுக்கானது

### உங்களுக்கு உடல்நலம் சரியில்லாமல் இருக்கும்போது வீட்டிலேயே இருங்கள்

உங்களுக்கு உடல்நலம் சரியில்லை என்றால், நோயறிகுறிகள் மிகவும் மிதமானவையாக இருக்கும்போது கூட, பாடசாலைக்கு வராதீர்கள். சுரம், இருமல், வலியோடு கூடிய தொண்டை அரிப்பு, மூச்சு வாங்கல், வாசனை அல்லது சுவைத்திறன் இழப்பு ஆகியன COVID-19 நோயறிகுறிகளில் அடங்கும்.

### நல்ல சுகாதாரப் பழக்கங்களைப் பின்பற்றுங்கள்

- தவறாமல் அவப்போது உங்களுடைய கைகளைக் கழுவுங்கள், அல்லது கைச் சுத்திகரிப்பானைப் பயன்படுத்துங்கள்.
- மற்றவர்களை முகமன் கூறி வரவேற்கும்போது கை-குலுக்குவதைத் தவிருங்கள்.
- இருமும்போது அல்லது தும்மும்போது உங்களுடைய நாசி மற்றும் வாய்ப் பகுதிகளை உங்களுடைய முழங்கை மடிப்பு அல்லது திசுத்தாள் ஒன்றைக் கொண்டு மூடிக்கொள்ளுங்கள். பயன்படுத்திய திசுத்தாட்களைக் குப்பைத் தொட்டியில் போடுங்கள்.
- கருவிகள் மற்றும் உபகரணங்களின் பயன்பாட்டிற்கு இடையேயும், மற்றவர்களுடன் அவற்றைப் பகிர்ந்துகொள்ளும்போதும் அவற்றைச் சுத்தம் செய்யுங்கள்.
- தேவைப்படும்போது 'சரீரப் பாதுகாப்பு சாதனங்க'(Personal Protective Equipment)ளைப் பயன்படுத்துங்கள்.

### உடல்ரீதி விலகலைப் பின்பற்றுங்கள்

பாடசாலைத் தலத்தில் இருக்கும் அனைத்து வேளைகளிலும் மற்றவர்களிடமிருந்து 1.5 மீட்டர் தூர இடைவெளி விட்டு விலகியிருங்கள்.

### நமது பாடசாலையினது சுற்றுச்சூழலைச் சுத்தமாக வைத்திருங்கள்

தொழில் புரியும் இடங்கள் மற்றும் கல்வி கற்கும் இடங்களை சுத்தமாகவும் துப்புறவாகவும் விட்டுச்செல்லுங்கள். தொழில் புரியும் இடங்களைப் பயன்படுத்திய பிறகு, அங்கிருக்கும் அடிக்கடிக் கைபடும் பகுதிகளைத் தகுந்த சுத்திகரிப்பானைப் பாவித்து முற்றிலுமாகத் துடையுங்கள்.

### ஒப்பந்ததாரர்கள் மற்றும் சேவை வழங்குநர்கள்

எமது பாடசாலைக்குள்ளாக சேவைகளையும் மற்ற நிகழ்ச்சிகளையும் வழங்கும் அனைத்து வர்த்தகங்களும் அமைப்புகளும் 'பொது சுகாதார உத்தரவு'(Public Health Orders) களுக்கு இணங்கவேண்டும் மற்றும் வேண்டப்படுவது போல 'கோவிட்-19 பாதுகாப்புத் திட்டம்' (COVID-19 Safety Plan) ஒன்றைக் கொண்டிருக்கவேண்டும்.

### ஏற்புக்கூற்று

பாடசாலைத் தலங்களுக்கு வருகைதருவதற்கு முன்பாக, பின்வரும் விடயங்களுக்கு நான் ஒப்புதல் அளிக்கிறேன்:

- வருகையாளர்கள், ஒப்பந்ததாரர்கள் மற்றும் சேவை வழங்குநர்களுக்கான COVID-19 தேவைப்பாடுகளுக்கு இணக்கமாக நடந்துகொள்ள நான் சம்மதிக்கிறேன் (இந்தப் பக்கத்தில் சொல்லப்பட்டுள்ளதைப் போல).
- நான் நலமாக இருக்கிறேன், மற்றும் COVID-19 அறிகுறிகள் எதுவும் எனக்கு இல்லை.
- சுகாதார அவசரநிலை அல்லது மற்ற அவசரநிலை ஒன்றில் என்னுடன் தொடர்புகொள்ள இயலுமாயிருக்கும் வகையில் என்னுடைய தனிப்பட்ட தொடர்பு விபரங்களைக் கொடுத்திருக்கிறேன்.
- பாடசாலையில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள பாதுகாப்பு, கொள்கை-முறை மற்றும் செயல்பாட்டுத் தேவைப்பாடுகள் அனைத்திற்கும் இணக்கமாக நடந்துகொள்ள சம்மதிக்கிறேன்.
- ஒப்பந்ததாரர்கள் மற்றும் சேவை வழங்குநர்களுக்காக – ஒப்பந்ததாரர்கள் மற்றும் சேவை வழங்குநர்களுக்கான (மேலே சொல்லப்பட்டுள்ள) தேவைப்பாடுகளுக்கு இணக்கமான முறையில் நான் தொழில் புரிவேன்.



NSW GOVERNMENT